திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்கிறபோது அப்படி ஒரு திட்டம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் அவர்களையும், சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளையும் அணுகிக் கேட்டபோது அந்தக் கோப்பானது கிரவுண்ட் வாட்டர் சான்றிதழ் ஒன்று வேண்டுமென்று ஒரே காரணத்திற்காக மட்டும் தேங்கி இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய பதிலில் எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கோப்பில் உள்ள குறைகளை நீக்கி இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் உள்ள ஆலங்குடி பேரூராட்சி இந்த உலக வங்கித் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. உலக வங்கி ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவேதான் அந்தப் பதிலை நான் சொல்ல வேண்டியிருந்தது. அடுத்தாற்போல் வருகிற ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆற்காடு வட்டம், ஆற்காடு மற்றும் திமிரி ஒன்றியங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

23—(*வினா எண். 9330) திரு. த. பழனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டம், ஆற்காடு ஒன்றியம், திமிரி ஒன்றியம், முப்பதுவெட்டி, பூங்காடு, சர்வந்தாங்கல், புன்னைப்பாடி, குஞ்சிரப்பந்தாங்கல், லாடாவரம், அத்தித்தாங்கல், கல்லேரி, கரிவேடு, வெம்பேடு, கே. வேலூர், கீழ்பாடி, பழையனூர், கனியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துகிற எண்ணம் எதுவும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக தனித்தனியாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அந்தத்

1987 மார்ச் 3]

திட்டங்கள் ஒப்புதலுக்காக தலைமைப் பொறியாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருப்பதாக கோட்டப் பொறியாளர் அவர்கள் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். இப்போது தொடர்ந்து வறட்சியாக இருப்பதால் திமிரி ஒன்றியம் மற்றும் என்னுடைய தொகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களில் 200 அடி, 300 அடி போர் போட்டாலும் பாறையாகவே வருகிறது. மேலும், பல கிராமங்களில் ஆற்றுப் படுகையாக இருப்பதால் உப்புத் தண்ணீராக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக வேகமாக நடவடிக்கை எடுத்து குடிநீர் வழங்க ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பல்வேறு கிராமங்களுக்குத் தண்ணீர் தரவேண்டி இருக்கிறது. தமிழகத்தில் தற்போது நீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே, முடிந்த அளவுக்கு எல்லா இடங்களிலும் கை இறைப்பான்கள் போட்டு குடிக்கத் தண்ணீர் தந்து கொண்டு இருக்கிறோம். சில இடங்களில் தண்ணீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை. ஆகவே, அதுபற்றியும், ப்ளோரைடு போன்றவை தண்ணீரில் இருக்கிறதா என்றும் கண்டறியப்பட்டு அவற்றை எல்லாம் நீக்கி நல்ல வகையில் தண்ணீர் தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் போடாததற்குக் காரணம் பெரிய நீர்நிலைகள் தமிழகத்தில் பல இடங்களில் இல்லை என்பதுதானே தவிர போடக்கூடாது என்பதல்ல.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் தராவிட்டாலும் தனித்தனியாக அந்தந்த கிராமங்களில் இருக்கிற நிலத்தடி நீரை வைத்து அந்தந்த கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்குகிற திட்டம் தலைமைப் பொறியாளரிடத்தில் கடந்த ஓராண்டுக் காலமாக நிலுவையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு உடனடியாக ஒப்புதல் வழங்கினால் இப்போதே அந்தத் திட்டத்தை செயல்முறைப்படுத்தலாம். பல கிராமங்களுக்கு டெண்டர் விடப்பட்டு மேல்நிலைத் தொட்டிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. கட்டப்பட்டிருக்கிற அந்தத் தொட்டிகளுக்கு நீர் வரத்துக்கள் சரிசெய்யப்பட்டு போர் போடப்பட்டு இருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் தரப்படுமேயானால் மிக விரைவில் அந்தக் கிராமங்கள் தண்ணீர் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று நான் எண்ணுகிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, முப்பதுவெட்டி என்ற கிராமத்தில் 2400 மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பூங்காடு என்ற கிராமத்தில் கை இறைப்பான்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. புன்னைப் பாடியிலும் கை இறைப்பான்கள் பொருந்தப்பட்டு இருக்கின் றன. குஞ்சிரப்பந்தாங்கல் பகுதியிலும் கையிறைப்பான்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. சர்வந்தாங்கல் பகுதியில் குடி நீர்த் திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. லாடவரம் கிராமத்திற்கு நிரந்தர பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட் டத்திற்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் துவக்கப் படவுள்ளன. அத்தித்தாங்கல், கல்லேரி, கரிவேடு, வெம்பேடு, ஆகிய எல்லா இடங்களிலும் கையிறைப்பான்கள் பொருத்தப் பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகு தியில் உள்ள கே. வேலூர், கீழ்பாடி, பழையனூர், கனியனூர் ஆகிய எல்லா ஊர்களிலும் சரிவர பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஜோலார்பேட்டை பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம்.

24— (*வினா எண். 9618) திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜோலார்பேட்டை பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் ஜோலார் பேட்டை மற்றும் நாட்றம்பள்ளி பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 198.68 இலட்ச மதிப்பீட்டில் தயாரிக்கப் பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனை யில் உள்ளது. வாரியத்தின் ஒப்புதலுக்குப் பின்பு, அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அரசு/ஆயுள் காப்பீட்டுக் கழக நிதியுதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

(முற்பகல் 10–10)

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்காக நன்றி. குடிநீர் வடிகால் வாரியம் அரசினுடைய அனுமதி யைப் பெற்று கடந்த 22–1–1987 அன்று, குடிநீர்